2003 மே 5]

புதிய கால்நடை மருந்தகத்திற்குரிய புதிய கட்டடம் கட்ட நிதி அளிக்க மற்றும் அக்கட்டடம் கட்டப்படும் வரை மருந்தகம் செயல்பட இலவசக் கட்டடம் வழங்கப்பட ஊராட்சி ஒன்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அருகில் உள்ள மருந்தகமோ, கிளை நிலையமோ 8 கிலோ மீட்டர் தொலைவிற்குக் குறைவாக இருக்கக் கூடாது. அக்கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். மேலும் அந்தக் கால்நடைக் கிளை நிலையத்திற்குத் தினமும் 30 கால்நடைகளாவது வந்து சிகிச்சை பெற வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் வாயிலாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 389, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

முற்பகல் 10-40

389—

கைமுறைக் காகித அலகுகள்

***6940—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999-ல் மூடப்பட்ட 15 கதர் கிராமக் கைமுறைக் காகித அலகுகளை மீண்டும் திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேற்காணும் பொருள் குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், பொதுவாக மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதிலும் குறிப்பாக என்னுடைய வந்தவாசி தொகுதி பின்தங்கிய நிலையில் மட்டும் இல்லை; வறட்சியின் கோரப் பிடியிலே இருக்கிறது. அங்குள்ள மக்களின் வாழ்க்கை ஜீவாதாரம் என்னவென்று சொன்னால், 80 சதவீத மக்கள் மானாவாரி விவசாயத்தை நம்பி வாழக்கூடிய மக்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

[2003 மே 5

ஆனால், அங்கே கைத்தொழிலை ஊக்குவிக்கிற வகையிலே, 15 கைமுறைக் காகித அலகுகள், இயங்கி வந்தன. அதைபோலவே, கீழ்க்கொடுங்காலூர் பனைப் பொருள் உற்பத்தி மையம் ஒன்று இயங்கி, அதுவும் நட்டத்திலே மூடக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. மூன்றாவதாக, கோரைப்பாய் உற்பத்தித் தொழிலிலே அங்கு இருக்கக்கூடிய பெருவாரியான மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதுவும், ஏற்பட்டு இருக்கிற வறட்சியாலே மூலப் பொருளான கோரை கிடைக்காமல், அந்தப் பாய்த் தொழிலும் நசிந்து போய், எந்த வகையிலும் அன்றாட வாழ்க்கைக்கு வேலை கிடைக்காத ஒரு நிலையிலே, அந்த மக்கள் அவதிப்படுகின்ற நிலையில் இருக்கின்றார்கள். இந்நிலையில், இயங்கி வந்த 15 கதர்— கிராம கைமுறைக் காகித அலகுகளை 1999 ஆம் ஆண்டு கடந்த கால அரசு மூடியிருக்கிறது. இதன் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட கைத்தொழில் தொழிலாளர்கள் தொழிலை இழந்து, பின்னடைந்த நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை இப்போது கேள்விக்குறி ஆக்கப்பட்டிருக்கிறது. எனவே, சுயதொழிலை ஊக்குவிக்கிற கொள்கையைக் கொண்டிருக்கிற நம்முடைய அரசு, அங்கே மூடப்பட்டுக் கிடக்கிற கைமுறைக் காகித அலகுகளை (hand-made paper units) மூடப்பட்டிருக்கின்ற 15 அலகுகளை மீண்டும் திறந்து, அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையிலே ஒளி ஏற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்தின்கீழ் இயங்கி வந்த அனைத்துக் கைமுறைக் காகித அலகுகளும் மிகுந்த நட்டத்தில் இயங்கி வந்ததாலும், தற்போது அரசால் ஆணையிடப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதியத்தால், கைமுறைக் காகித அலகுத் தொழிலாளர்களுக்கு அதிகபட்சமான ஊதியம் வழங்க வேண்டிய கட்டாய சூழ்நிலையாலும், தொடர்ந்து அரசுத் துறைகளிடமிருந்து தேவையான நமுனாக்கள் பெறப்படாததாலும், வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் கைமுறைக் காகித விலை, வெளிச்சந்தையில் விற்கப்படும் விலையைவிடக் கூடுதலாக இருப்பதாலும், விற்பனை செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாக இருப்பதாலும், அரசாணை நிலை எண் 217, கைத்தறி, கைவினைப்பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த் (டி–2) துறை, நாள் 12-11-1999-ன்படி, 15 கைமுறைக் காகித அலகுகள் நிரந்தரமாக மூடப்பட்டுவிட்டன.

2003 மே 5]

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேறு எங்காவது கைமுறைக் காகித அலகுகள் இப்போது இயங்கி வருகின்றனவா என்பதை அறிய விரும்புவதோடு, அப்படி மூடப்பட்ட இந்த கிராம கைமுறைக் காகித அலகுகளைத் திறக்க முடியவில்லை என்று சொன்னாலும், அதிலே பாதிக்கப்பட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு, வேறு தொழில் பயிற்சிகள் ஏதாவது கொடுத்து, வேறு தொழிலை அவர்கள் செய்து, தங்கள் வாழ்க்கையை மேற்கொள்வதற்கு இந்த அரசு வேறு மாற்றுத் திட்டங்களை வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சங்கம் மூலம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இந்த வழக்கு முடியும்வரை இதைச் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 390, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

390—

சாலையைச் சீர் செய்தல்

***19389—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையிலுள்ள வனத் துறை சாலைகளில் வாகனங்கள் செல்ல முடியாமல் உள்ளதால், அச்சாலைகள் சீர் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் கோட்டம், ஜவ்வாது மலையில் உள்ள வனச் சாலைகளின் மொத்த நீளம் 147.75 கிலோமீட்டர் ஆகும்.